கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச் சிறப்பாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
588, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 23 புதன்கிழமை [09-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 309

S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
588, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

# சபாநாயகர் முகம்மது மீதும் நம்பிக்கையில்லா பிரேரணை!

## எதிர்க்கட்சிகள் நேற்றுத் தாக்கல்

கொழும்பு, அக்டோபர் 9

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது மீது எதிர்க் கட்சிகள் நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளன.

அந்தப் பிரேரணையை எதிர்க்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று மாலை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி திரு. பிரேமதாசவுக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையை முதலில் ஏற்றுக் கொண்ட சபாநாயகர், தாம் அதனை நிராகரித்து விட்டதாக நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். அதன் விளைவே அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகும்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சபாநாயகரின் முடிவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

கொழும்பு, அக். 9

தமக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பாக சபாநாயகர் தனிச்சாேடு எடுத்த முடிவுக்கு அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

"குற்ற விசாரணைப் பிரேரணையில் இருந்து நான் மீண்டது, இரண்டாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியது போல உள்ளது—" என்று கூறி அவர் தனது மகிழ்ச்சியை வெளியிட்டார்.

நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவது சபாநாயகருக்கும், பிரதி சபாநாயகருக்கும் சிரமமாக இருக்கும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து சபாநாய

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



பணம் பார்த்தவும் வரை பாயும் என்டது சரி தான் பாருங்கோ......!

## மக்கள் வெள்ளம்

கொழும்பு, அக். 9

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணையை நிராகரித்த சபாநாயகர் தீர்ப்பு வழங்கிய பின்னரும்—

நேற்று முன்தினம் மாலையில் ஐ. தே. க. அதிருப்தியாளர் குழு, கருத்தரங்கில் நடத்திய பொதுக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் பங்குபற்றியதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ]

## அரசு மீது சுமத்தப்பட்டவை பொய் குற்றச்சாட்டுகளே!

### எம். பிக்கள் கூட்டத்தில் பிரேமா விளக்கம்

கொழும்பு, அக். 9

அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அப்பட்டமான பொய்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கத் தேவையான அத்தாட்சிகளும், ஆவணங்களும் எம்மிடம் உள்ளன.

—இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா.

நேற்று முன்தினம் [திங்கட்கிழமை] நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி அங்கு ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாரதூரமான குற்றச்சாட்டுக்களைக் கொண்டுள்ளது. இது அரசாங்க தரப்பு நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாகும். இதில் ஜனாதிபதிக்கு எதிராக எந்தவிதமான குற்றச் சாட்டும் சுமத்தப்படவில்லை; அரசாங்கம் மீதே குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஆகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சபையில் கூச்சல், குழப்பம்; கூட்ட அமர்வு ஒத்திவைப்பு

### அதிருப்திக் குழு எம். பிக்கள் அமைதி காத்தனர்

கொழும்பு, அக். 9

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடிய சிறிது நேரத்திலேயே அங்கு கூச்சலும் குழப்பமும் நிலவின. இதனால் சபை அமர்வை சபாநாயகர் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிவரை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது குறித்து சபாநாயகர் உத்தியோக பூர்வமாக சபையில் அறிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, சபாநாயகரின் தீர்ப்புக் குறித்து சபையில் அறிக்கை ஒன்றைப் படித்தார்.

"சபாநாயகர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், குற்ற விசாரணைப் பிரேரணையில் இடப்பட்டிருந்த சில கையெழுத்துகள் செல்லாதவை என்று வெளிப்படையாகவே கூறியிருந்தார். அவ்வாறு கூறியது எம். பிக்களின் கௌரவத்தைப் பாதிக்கும் செயலாகும்.

எந்தக் கையெழுத்துகள் செல்லாதவை என்ற விபரத்தைச் சபாநாயகர் சபைக்குத் தெரிவிக்க வேண்டும்.

செல்லாத கையெழுத்துக்கள் பற்றி ஆராய நாடாளு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எதிர்க்கட்சியினர் இன்றும் சபையைக் குழப்புவர்?

கொழும்பு, அக். 9

நாடாளுமன்றம் இன்று கூடும் போது, நேற்று நடந்த போல இன்றும் எதிரணியினர் சபையைக் குழப்பக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அரசுக்கு எதிராக எதிரணிகள் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று விவாதத்துக்கு எடுக்க வேண்டும் என்று ஆளும் கட்சி வற்புறுத்துகின்றது.

ஆனால் சபாநாயகருக்கு எதிராகத் தாங்கள் சமர்ப்பித்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையே முதலில் எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வற்புறுத்துகின்றன.

சபாநாயகருக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் நேற்று சேர்க்கப்பட்டது.

ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டு ஐந்து நாட்களின் பின்னரே எந்தப் பிரேரணையும் நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட முடியும் என்பது ஒரு பொதுவான விதியாகும்.

அதன்படி சபாநாயகருக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றத்தில் எடுக்கப்படுவதற்குரிய தினம் வரும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியா சென்று திரும்பியதும் சபாநாயகர் முடிவில் மாற்றம்!

### சிறிமாவோ குற்றம் சுமத்துகிறார்

கொழும்பு, அக். 9

இந்தியா சென்று திரும்பிய பின்னரே ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை நிராகரிக்கும் திடீர் முடிவைச் சபாநாயகர் எடுத்திருக்கிறார்.

—இவ்வாறு குற்றம் சுமத்தி இருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

நேற்று நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பிரேரணையை முதலில் ஏற்றுக்கொண்டுவிட்டு பின்னர் அதனை நிராகரித்திருப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முகம்மதுவுக்கு ரூ. 10 கோடி?

கொழும்பு, அக். 9

ஜனாதிபதி மீதான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை நிராகரிக்க வேண்டும் என்பதற்காக சபாநாயகர் முகம்மதுவுக்கு 10 கோடி ரூபா (இலங்கைப் பணம்) வழங்கப்பட்டதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டதை எதிர்க்கட்சி எம். பி.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவுப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு!

கொழும்பு, அக். 9

முல்லைத்தீவின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை—

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு பாதுகாப்புப் படையினருக்கு அவ்வளவு காலம் எடுக்காது என்றும்— திரு பிரபாகரன் எங்கு இருக்கிறார் என்பது குறித்த பாதுகாப்புப் படையினரின் புலனாய்வு அறிக்கை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க நேற்று லக்பானுவத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டத்தில் உள்ள எல்லைக் கிராம இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் தளபதி அந்தப் பேட்டியில் தெரிவித்தார். (ஐ)

## சபாநாயகர் ராஜினாமா?

லண்டன், அக். 9

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தமது பதவியை ராஜினாமா செய்ய முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் அவரை ராஜினாமா செய்ய வேண்டாம் என்று ... பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது. (ஐ)

## அரச எம்.பிக்களுக்கு லஞ்சம் வழங்க எதிரணி முயற்சி!

கொழும்பு, அக். 9

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கென பெரும் தொகைப் பணத்தை சில அரச தரப்பு எம். பிக்களுக்கு வழங்க எதிரணியினர் முயற்சித்தனர் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குற்றம் சுமத்தினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தம்முடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நூற்றுப் பேர் சேர்ந்து கொண்டுள்ளனர் என்று அதிருப்தியாளர்கள் 8 பேரும் கடந்த ஒரு மாத காலமாக உறுதி கூறி வருகின்றனர்.

ஆனால் அவர்கள் இதில் வெற்றி அடையவில்லை; தாம் அமைப்பதற்குத் திட்டமிட்ட அரசாங்கத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி தருவதாக அவர்கள் உறுதி அளித்துள்ளனர்;

### பணம் வழங்க முன் வந்தனர்

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்க

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கிட்டுவுக்கு ஆயுதம் வழங்க லலித் இணங்கியிருந்தார்!

### அவர் தப்ப முடியாது என்கிறார் பிரேமா

கொழும்பு, அக். 9

திரு லலித் அத்துலத்முதலி தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது விடுதலைப் புலிகளின் பிரமுகர் கிட்டுவுடன் பேச்சு நடத்தினார். கிட்டுவுக்கு ஆயுதங்கள் வழங்கவும் அவர் தயாராக இருந்தார். அதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன.

—இவ்வாறு கூறினார் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா. அவர் மேலும் கூறியதாவது:-

கட்டுநாயக்காவில் வைத்து விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதம் கொடுத்தது என்பதற்கு தம்மிடம் ஆதாரம் இருப்பதாக காலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் லலித் அத்துலத்முதலி கூறியிருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி, உண்மையைத் திரித்துக் கூறுவதன் மூலம் தப்பித்துக் கொள்ள முடியாது.

அத்துடன், அவர் கிட்டுவுடன் எவ்வாறு பேச்சு வார்த்தை நடத்தினார் என

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் பேச பிரேமா அனுமதி பெற்றிருந்தாராம்!

கொழும்பு, அக். 9

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியது பற்றி அமைச்சரவைக்கு அறிவிக்கப்படவில்லை என்று அதிருப்தியாளர்கள் மக்களுக்குக் கூறி வருகின்றனர். ஆனால் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது.

—இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா நேற்று முன்தினம் மேலும் கூறினார்.

பேச்சுவார்த்தை நடந்த போது விடுதலைப் புலிகள் புத்த சிறாகத்தைப் பிரகடனப்படுத்தியிருந்தார்கள். வடக்கு — கிழக்கு மாகாண சபையை நடத்திய ஈ. பி. ஆர். எல். எவ் விடமிருந்தே அப்போது நாட்டுக்கு அச்சுறுத்தல்கள் இருந்தன.

வடக்கு கிழக்கில் ஈழம் உருவாக அரசு அனுமதி அளித்தது என்று அப்போது குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சியினர், அன்று ஈழத்தைப் பிரகடனஞ் செய்த ஈ. பி.

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

திருவள்ளுவர் அச்சகத்திற்கு அச்சுக்கோர்ப்பதற்கும், இயந்திரம் இயக்குவதற்கும் அனுபவம் வாய்ந்தவர் தேவை தொடர்பு: 593, பருத்தித்துறை வீதி, நல்லூர் [மாநகரசபைக்கு கிழக்கே] (18357)

### மணமகன் தேவை

யாழ். இந்து செவ்வாய் குற்றமற்ற இரகபாவம் குறைந்த ஏ. எல். படித்து தொழில் புரியும் 36 வயது சைவ போசன பெண்ணுக்கு மணமகன் தேவை. பி. ஏ. பட்டதாரி ஆசிரியர்கள், சாதாரண சேவையில் கடமையாற்றுபவர்கள் விரும்பத்தக்கது. இல 359 மே/பா உதயன். யாழ்ப்பாணம். [18356]

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமற்ற 31 வயது அழகிய படித்த பெண்ணுக்கு A/L B.com, B.Sc. சித்தியடைந்து வேலையோ அல்லது வேலை பற்றிருக்கும் மணமகன் Sponsor உடன் கனடாவில் உயர்ந்த வேலை பெற விரும்பினால் குவிற்றா இழமையில் சந்திக்கவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். (18349)

### மில்க்வைற் சலவைத்தூள் இனாம்

லக்ஸ்பிறே, ஹைலான்ட் மற்றும் பால்மா வெற்றுப் பக்கெட்டுகள் 10 நல்ல நிலைமையில் தந்து மில்க்வைற் சலவைத்தூள் 50 கிறாம் பைக்கெட் ஒன்று இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம் [சி 0635]

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும் பியூட்டா என்ரப்பிறைசஸ், 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி 0694]

### நோவு வைத்தியம்

ஒட்டகப் புலம் சமத்தார் நோவு எண்ணெய் எஸ் ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4326]

### மணமகள் தேவை

யாழ், இந்து 47 வயது கிரகபாவம் கூடிய இங்கிலாந்து எலக்ரிக்கல், எலக்ரோனிக் பொறியியலாளராகத் தொழில் புரியும் மணமகனுக்கு அழகும், பண்புள்ள 35 வயதிற்கு மேற்படாத விஞ்ஞான பட்டதாரி அல்லது ஏ எல் படித்து தொழில் புரியும் மணமகள் தேவை. இல 358, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18355]

### சோதிடம்

உங்களுக்கு எத்தகைய கஷ்டமானாலும் தீர்த்து வைக்கப்படும் சாதகத்துடன் வரவும். சாதகம் இல்லாதவர்களும் வரலாம். திராவிட்டால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீ சக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, (ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி) நல்லூர். [18344]

## அறுவர் பலி!

புதுடில்லி. ஒக். 9 பஞ்சாப்பில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## 93 A/L

★ [விஞ்ஞான பாடங்கள் மட்டும்]

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

ஆரம்பம்:
19 — 10 — 1991
[சனி காலை 7 மணி]

ஏம திறத்தை தவிர்க்க அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

NEW MASTER INSTITUTE
JAFFNA.
[சி-0702]

## ZOOLOGY

திரு R.ஈஸ்வரதாசன்
B. Sc (Cey.)

93 A/L

ஆரம்பம்:
16 - 10 - 1991

விவரங்களுக்கு:

PERSONAL
NEW SCIENCE CENTRE,
Elilakam Front Lane
JAFFNA.
[சி-0626]

## A/L DAY CLASS

| | | |
|---|---|---|
| 8 30 | Chemistry | திரு. D S சோதி |
| 9.30 | Physics | திரு. துஷ்யந்தன் |
| 10.45 | Pure Maths | திரு. வரதராஜன் |
| 10.45 | Botany | திரு. சதீஷ் |
| 12.00 | Zoology | திரு. K. சிவபாதம் |
| 12.00 | App. Maths | திரு. வரதராஜன் |

ஆரம்பம்: 09 — 10 — 1991

BOND கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4330]

## நடமாடும் செயலகம்
10 - 10 - 1991

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பொது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்க திணைக்களங்களுக்கு செல்லுதலும், தமது தேவைகளை நிறைவு செய்தலும் மிகக் கடினமான ஓர் இலக்காக உள்ளது.

இத்தகைய இடர்பாடுகளையும், சிரமங்களையும், விண்கால தாமதங்களையும் தவிர்க்கும் பொருட்டு யாழ். மாவட்டத்தின் சில தொலை தூரப் பிரதேசங்களைத் தெரிந்தெடுத்து அங்கே நடமாடும் செயலக சேவையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலாவது நடமாடும் செயலக அமர்வு, யாழ்/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 10-10-1991 வியாழக்கிழமை காலை 8 00 மணி தொடக்கம் மாலை 4–30 மணி வரை நடைபெறும். இச் செயலகத்திற்கு எல்லா அரச திணைக்களங்களும், அதன் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை, சோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழுகின்ற பொது மக்கள் இச் செயலகத்தினைப் பயன்படுத்தி தமது பிரச்சினைகளைத் தீர்வுகாண முன்வரும்படி அழைக்கப்படுகின்றனர். பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள பொது நல அமைப்புகளும், முன்கூட்டியே தொடர்பு கொள்வதன் மூலம் இச் செயலக அமர்வினை பயனுள்ளதாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல்லா பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு காண முடியாவிட்டாலும் உரிய வழிகாட்டலைச் செய்ய முடியும்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

[சி/0638]

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்

G. C. E. A/L 93 பிரிவு I

| | | |
|---|---|---|
| தமிழ் | - திரு. குழந்தை | 7-8 |
| இந்துநாகரீகம் | - திரு. ஜோதீஸ்வரன் | 8-9 |
| பொருளியல் | - திரு. உதயன் | 9-10 |
| கணக்கியல் | - திரு. ஸ்ரீ | 10-11 |
| வர்த்தகம் | - திரு. இரட்ணம் | 11-12 |
| அளவையியல் | - திரு. சயந்தன் | 12-1 |
| புவியியல் | - திரு. வேலாயுதம் | 1-2 |
| அரசியல் | - திரு. குமார் | 2-3 |

ஆரம்பம் : 19—10—1991
காலை 7-00 மணி

குறிப்பு : வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி/0631)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
06 - 08 - 1915

இறப்பு:
05 - 10 - 1986

திதி:
09—10—1991

### அமரர் அருணாசலம் கந்தசாமி

(பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர், வலிகாமம் வடக்கு - உடுவில்)

நிழல் தந்த பெருந்தகையே!

உங்களோடு வாழ்ந்திட்ட நினைவலை நாட்களை எண்ணியே நாம் வாடுகின்றோம். நீள் மெய் தீண்டி, அன்பு நிறை வாசகங்களை கேட்ட நாட்கள் மீண்டும் வருமோ!

மனைவி, மக்கள்,
உடன் பிறப்புக்கள், மருமக்கள்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம். [4333]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
24 - 07 - 1947

()

மறைவு:
10 - 07 - 1991



### இ. சண்முகநாதன்

மாலையிலே நீங்கள் மகிழ்வுடனே இருந்து காலமெல்லாம் எம்மைக் காத்திடுவீர் என்று சீலமெல்லாம் பெற்று சிறந்திருப்போமென்று சிரித்திருந்தோம் இறைவா! மதிகெட்ட கடவுளரும் சதி ஒன்று செய்துனக்கு விதி ஒன்று சமைத்துவிட்டான். கதியற்று நாமும் கலங்குகிறோம். இங்கு என்றென்றும் எம் கலக்கம் உன் காதில் ஒலித்திடட்டும் குவலயத்தே.

உமது பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

துன்னாலை, கரவெட்டி. (18389)

## ஓராண்டு நினைவஞ்சலி





இராமலிங்கம் சிறீபாஸ்கரன் — இராமலிங்கம் சிறீரங்கன்
[சாவகச்சேரி சந்தை வியாபாரிகள்]

| | இராமலிங்கம் சிறீபாஸ்கரன் | இராமலிங்கம் சிறீரங்கன் |
|---|---|---|
| அன்னை மடியில்:- | 01 - 11 - 1969 | 06 - 09 - 1973 |
| ஆண்டவன் அடியில்:- | 09 - 10 - 1990 | 09 - 10 - 1990 |

உங்கள் நினைவால் பேரமைதி சாந்தியுடன் வாழ்வென வாழ்த்துகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

முத்துமாரி கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. [18111]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புக்களுக்குத் தனித்துவமான நிறுவனம்):

93 ஆரம்பம்: 19-10-1991
8-00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. க. கலாகரன் |
| வர்த்தகம்: | திரு. தேவா |
| கணக்கியல்: | திரு.வன்னியசிங்கம் |
| அளவையியல்: | திரு. சுப்பிரமணியம் |
| அரசியல்: | திரு. சிலன். |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்: | குழந்தை |
| புவியியல்: | குணராசா |
| சரித்திரம்: | விஜயன் |

மு. குறிப்பு:
★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்; முதல் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.
★ 93 ஆண்டு A/L எமது நிறுவனத்தில் சுற்றும் மாணவர்களுக்கு O/L இலவச வகுப்புக்களும் நடைபெறும்.
(சி.0689)

## New Science Academy
Jaffna.

92 A/L
PHYSICS
★ புலங்கள் ★

பிரிவு I mon. wed. } 5 6
ஆரம்பம்:
09-10-1991

பிரிவு II sat. sun } 11-12
ஆரம்பம்:
12-10-1991

Mr. கணேசன்
B.Sc. (Eng.)
(சி.0641)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திருந்தும் உணர்வு வருமா?

ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தமை. அரசாங்கத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணை தோற்குமா வெல்லுமா என்ற சந்தேக நிலை. தெற்கின் அரசியல் குழப்பம் இன்னும் என்னென்ன உருவங்களை எடுக்குமோ என்ற பரபரப்பான நிலை. —

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை தனிநபர் சர்வாதிகாரத்துக்கு வழி செய்கின்றது. ஆகவே அது மாற்றப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளின் சபையான நாடாளுமன்றத்துக்கே கூடுதல் அதிகாரம் இருக்க வேண்டும். எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறையை மக்கள் ஆதரிக்கிறார்களா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்கும் விதத்தில், சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் —

இப்படிப் பலவாறாகத் தெற்கின் அரசியல் குட்டை குழம்பியிருக்கின்ற வேளையில் —

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய தன் அவசியத்தை மிகவும் காத்திரமாக வலியுறுத்தி இருக்கிறார். நாட்டில் அமைதி தோன்ற வேண்டுமானால் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டாக வேண்டும் என்று அவர் சொல்கிறார்.

அவர் இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் அல்லர். பன்னிரெண்டு வருடங்கள் நாட்டின் ஆட்சி பீடத்திற்குத் தலைமை வகித்தவர்.

தமது பதவிக் காலத்தில் தமிழர்களின் உரிமைகளை நியாயபூர்வமாக வழங்க விரும்பாமல், அவர்களை அடக்குமுறை செய்தவர். ஆட்சிக் கட்டிலில் இல்லாமல் எதிரணியில் இருந்த வேளையிலும், தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தடைகள் விளைவித்தவர். வழங்க முனைந்தவர்களையும் தடுத்தவர்!

இந்தத் தவறை அவர் மட்டும் இழைக்கவில்லை. தென் இலங்கையின் அரசியல் தலைவர்கள் அத்தனை பேருமே செய்தார்கள். இப்போதும் அதனையே செய்கிறார்கள். தமிழர்களின் நலன்களை மட்டுமன்றி, நாட்டின் நலன்களையும் புறக்கணித்து, தமது சுயநலன் — அரசியல் லாபம்— கருதியே எல்லோரும் இப்படிச் செய்தார்கள்; செய்கிறார்கள்.

இந்தத் தவறை திருமதி பண்டாரநாயக்கா இப்போது ஒப்புக் கொள்கிறார்; உணர்ந்திருக்கிறார். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு ஒரு தரப்பினர் வாக்குறுதி அளிக்கும்போது எதிரணியினர் அதனைத் தடுத்ததாக ஏற்றுக் கொள்கிறார்.

இந்த நிலை மாறி, சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கருத்திணக்கம் காணும் அரசியல் மரபைப் பின்பற்றித் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா இதனை உளப்பூர்வமாகவே தெரிவித்திருந்தால் வரவேற்கத் தக்கதே. ஏனையோரும் தங்கள் தவறை உணர்ந்து திருந்திக் கொள்ள நினைப்பது எப்போது?

நினைத்தால் மட்டும் போதாது. இதய சுத்தியுடன் அதனைச் செயலில் காட்டவும் துணிய வேண்டும். தென்னிலங்கைத் தலைவர்களுக்கு அந்தத் துணிவும், உணர்வும் வருமா? எப்போது வரும்? அப்போதுதான் நாட்டில் அமைதி பிறக்கும். அது முன்னேற வழி பிறக்கும்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 9

யாழ் மாவட்ட பல நோ. கூ. சங்க, தெ. ப. பொ. கூ. வி. கூ. சங்க மற்றும் கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் [மணியம் கட்டடத்தில்] நடைபெறவுள்ளது (ஒ)

## பத்மநாபா கொலை விசாரணை

ராஜீவ் காந்தி கொலை வழக்கை சென்னையில் விசாரித்து வரும் தனி நீதிமன்றம் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா மற்றும் அவரின் சகாக்களின் கொலை வழக்கையும் விசாரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) பதாகச் சபாநாயகர் அறிவித்திருப்பது எதிர்பாராத ஒன்றாகும்.

இந்தியா சென்று திரும்பிய பின்னர் சபாநாயகர் இத்திடீர் முடிவை எடுத்திருக்கிறார்.

எனினும் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்றி, நாடாளுமன்ற ஆட்சியைக்கொண்டுவரும் எமது போராட்டம் தொடரும் — இப்படி அவர் மேலும் சொன்னார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தயாராகவுள்ளனர். எனினும் அவர்கள் உயிருக்கு அஞ்சி வெளிப்படையாக வாக்களிக்கப் பின் நிற்கிறார்கள் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். (உ-எ-3)

## முகம்மது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) ஒருவர் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிப் பேசினார்:

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வரும் நடவடிக்கையில் சபாநாயகரும் சம்பந்தப்பட்டிருப்பதாக முன்னர் கூறப்பட்டது.

ஆனால் அவர் இப்போது அந்தப் பிரேரணையை நிராகரித்து தீர்ப்பளித்திருக்கிறார். அவரின் மனதை மாற்றச் செய்தது எது என்பது குறித்து அரசியல் வட்டாரங்களில் பலவிதமாகப் பேசப்படுவதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது. [உ-எ]

## சபாநாயகர்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச அணி, ஈ. பி. ஆர். எல். எப்., நவசமசமாஜக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் சார்பில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கும் எதிர்க்கட்சியினர், தாம் முன்னர் கொண்டு வந்த — அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இம்மாதக் கடைசியில் ஐந்து நாட்களுக்கு நடத்த வசதி செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். ஆனால் அரசாங்கம் அந்தப் பிரேரணையை இன்று விவாதத்துக்கு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

சபாநாயகர் மீது தாம் நம்பிக்கை இழந்து விட்டதாகவும் — சபாநாயகர் பதவி விலக வேண்டும் என்றும் — எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார். [அ-எ]

# ஆளும் கட்சி எம். பிக்களின் ஒப்பங்களில் சந்தேகம்!

## சபாநாயகர் சபையில் அறிவிப்பு

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ள ஆளும் ஐ. தே. கவின் எம். பிக்கள் சிலரின் கையெழுத்துகளில்தான் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக சபாநாயகர் முகம்மது தெரிவித்தார்.

அப்பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ள எதிர்க் கட்சி எம். பிக்களின் கையெழுத்துகள் தொடர்பாக தமக்கு சந்தேகம் எழவில்லை என்றும் சபாநாயகர் கூறினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் தமது தீர்ப்பை வழங்கிய பின்னர், எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சபாநாயகர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

# அரசநாடாளுமன்றகுழுவின் கூட்டத்தில் 111 எம். பிக்கள்

கொழும்பு, அக். 9

திங்களன்று நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் 111 எம். பிக்கள் கலந்துகொண்டனர்.

திரு. பி. வி. கவிரத்ன சுகவீனம் காரணமாக கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த எண்மருடன் புதிதாகச் சேர்ந்து கொண்டனர் என்று கருதப்படும் திரு. ரவி சமரவீர, ஆரியரட்ன ஜெயத்திலக, திரு. எஸ் ஏ. முத்துபண்டா, டாக்டர் பி. எம். பி. சிறில் ஆகியோருக்கும் அரச நாடாளுமன்றக் குழுவின் முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்த நான்கு உறுப்பினர்களும் இன்னும் கட்சியிலேயே இருப்பதாகவும் —

அரச நாடாளுமன்றக் குழுவின் முடிவுகளுக்கு எதிராக அவர்கள் தனிச் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-த)

## அரச எம். பி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) ளிக்கத் தமக்குப் பெரும் தொகையான பணத்தை வழங்க எதிரணியினர் முன்வந்திருப்பதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதனையும் ஏற்காது நிராகரித்து விட்டனர்.

பெரும் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டவர்களும் தற்போது அரசாங்கத்தில் இடமளிக்கப்படாதவர்களுமான, கூட்டுத்தாபனங்களின் முன்னாள் தலைவர்களும், சில சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளும இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி கேட்டுள்ளனர் — என்று ஜனாதிபதி சொன்னார்.

இதற்கிடையில்—

கூட்டுத் தாபனங்களின் இரு முன்னாள் தலைவர்கள் தமது வீட்டிற்கு வந்து, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தால் பெரும் தொகைப் பணத்தை தருவதாக உறுதியளித்தனர் என்று அரச எம். பியான காமி ஆபேவீர கூறியிருக்கிறார்

இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒருவரும், கூட்டுத்தாபனத் தலைவர் ஒருவரும் தம்மைச் சந்தித்து, அதிருப்தியாளர்கள் புதிதாக அமைக்கவிருக்கும் அரசாங்கத்தில் தமக்கு உயர் பதவிகளைத் தருவதாகக் கூறினர் என்று மற்றொரு எம். பியுமான தர்மதேவ ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார். [இ-உ-எ-த]

## அரசு மீது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) விவாதத்துக்கு எடுத்துக் கொண்டு அதனைத் தோல்வி அடையச் செய்வதன் மூலம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமமை இந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து நீக்கிக் கொள்ளவேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் பதில் அளிக்கத் தேவையான ஆவணங்களும் அத்தாட்சிகளும் எம்மிடம் உள்ளன.

### அப்பட்டமான பொய்கள்

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியமை, ஈரோஸுடன் ஒப்பந்தம் செய்தமை, வடக்கு - கிழக்கின் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்யப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் மக்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தவறான வழியில் இட்டுச் செல்ல தெரிவிக்கப்பட்ட அப்பட்டமான பொய்கள்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, இங்கு அரசியல் உறுதிப்பாடு இல்லை என்பதை வெளிநாடுகளுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இத்தகைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. — என்றார்.

## புலிகளுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) ஆர். எல். எவ். உடன் இப்போது சேர்ந்து கொண்டு எம்மை மீண்டும் குற்றஞ் சாட்டுகின்றனர். நாம் ஆயுதம் வழங்கியதாக ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். தற்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டைப் பிளவுபடுத்த நாம் எவரையும் அனுமதிக்கமாட்டோம் — இவ்வாறு ஜனாதிபதி தமது உரையில் தெரிவித்தார். (இ-த)

## கிட்டுவிடம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) பதற்கும்—

அவருக்கு ஆயுதங்கள் கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதற்கும்— என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன.

### கோழைகள்

நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது கட்சியின் தலைமைப் பதவியை ஏற்க விரும்பாத கோழைகள்தான் இவர்கள். ஆனால் நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டதும் அவர்கள் புத்திசாலிகளாக மாறி தலைவர்களாக விளங்க விரும்புகிறார்கள்.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தால் நாடு எதிர்நோக்கிய கஷ்ட நிலை தற்போது நீங்கிவிட்டது.

என் மீது வசை பாடுவதையோ கண்டனம் தெரிவிப்பதையோ ஒரு பொருட்டாக நான் எடுப்பதில்லை.

ஆனால் அவர்கள் மேற்கொண்டு வரும் பிரசாரம் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமாக இருக்கிறது பாதுகாப்புப் படையினர் பல வெற்றிகளை ஈட்டிப் பல பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது இத்தகைய பிரசாரம் [illegible] எற்படுத்தும் — என்றார். (இ-உ-எ-த)

# கொழும்புக்கு புலிகள் வரலாம் என அச்சம்!

## பல இடங்களில் புதிய காவல் அரண்கள்

கொழும்பு, அக். 9

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வருவதைத் தடுப்பதற்காக, யாழ்—கொழும்பு வீதி நெடுகிலும், காவல் தடுப்புகள் போடப்பட்டிருப்பதாக பாதுகாப்புப்படை அதிகாரி ஒருவர் 'லங்காதீப' சிங்களப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சார்க் உச்சி மாநாடு நடைபெறும் சமயம் புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற சந்தேகம் காரணமாகவே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் —

விசேட காவல் நிலைகள் அமைக்கப்பட்டு, அவற்றில் பொலீஸாரும் இராணுவத்தினரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறியதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் பாதுகாப்புப் படையினர் போன்று வேடமிட்டு வரலாம் என்பதால் சகல பாதுகாப்புப் படை வாகனங்களையும் காவல் நிலைகளில் பரிசோதனை செய்யும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று—

இதன்படி, பாதுகாப்புப் படையினர், கலாவெவ, திஸாவெவ, ரம்பாவெவ, கெக்கிராவ, மிகிந்தலை, பவரன்குளம், குருநாகல்வீதி ஆகிய இடங்களில் விசேட காவல் அரண்களை அமைத்துள்ளனர் என்றும் அப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது. (ஓ-10)

# வர்த்தகரிடம் பணம் பறித்த ராணுவத்தினர் மீது வழக்கு

கொழும்பு, அக். 9

ஜே. வி. பியின் இராணுவப் பிரிவான "தேசப்பிரேமி" இயக்கத்தின் பெயரைப் பாவித்து, வர்த்தகர் ஒருவரை மிரட்டி, அவரிடம் இருந்து பணம் பெற்ற இராணுவ லெப்டினன்ட் இருவர் உட்பட மூவர் மீது கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

லெப். சந்தனலால் அதிகாரி நாயக்கா, லெப். சேனக ஹரிபிரிய ஆனந்த சில்வா மற்றும் கொம்பனி வீதியைச் சேர்ந்த வர்த்தகரான பிலான ஆரச்சிகே தமின மகேஷ் ஆகிய மூவருக்கும் எதிராகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி கொழும்பு வார்ட் பிளேஸில் வசிக்கும் ஸ்ரான்லி தசில்வா என்ற வர்த்தகரிடம், 'இந்திய குரங்குப் படையை' எதிர்த்துப் போராடுவதற்காக இருபது லட்சம் ரூபாவைத் தமது தேசப்பிரேமி இயக்கத்துக்குக் கொடுக்குமாறு கடிதம் ஒன்று வழங்கப்பட்டதாகவும்—

கடிதம் கொடுக்கப்பட்ட 72 மணித்தியாலங்களுக்குள் தமது பிரதிநிதியிடம் பணம் கையளிக்கப்படாவிடில், அவரின் பிள்ளைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென கடிதத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகவும் —

இதை அடுத்து அந்த வர்த்தகர் தமது உறவினர் ஒருவர் மூலம், நாரஹேன்பிட்டியில் வைத்து பணத்தைக் கையளித்ததாகவும் — பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்தது. (த-10)

## நோயாளரை பதிவு செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 9

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகள் இன்றும், நாளையும் [புதன்- வியாழன்] காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை யாழ். போதனா வைத்தியசாலையில் சமுகமளித்து தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளது. [இ-15]

## சபையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] மன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்"

— இப்படி திருமதி பண்டாரநாயக்கா தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இதனையடுத்தே சபையில் கூச்சலும் குழப்பமும் எழுந்தன.

அமைதியை நிலைநாட்டச் சபாநாயகர் முயற்சித்தார். அது பயனளிக்காமற்போகவே சபையை பதினைந்து நிமிடங்களுக்கு அவர் ஒத்திவைத்தார்.

பின்னர் மீண்டும் சபை கூடியபோது, சுதந்திரக் கட்சி எம். பி. ரிச்சர்ட் பத்திரன, 'யாருடைய கையெழுத்துக்கள் செல்லாதவை என்று சபாநாயகர் அறிவிக்க வேண்டும்'' —என்று கோரினார்.

இதனை அடுத்து மீண்டும் சபையில் குழப்பமும் அமளியும் ஏற்பட்டன. மொத்தத்தில் சுமார் 25 நிமிட நேரம் சபையில் பெரும் குழப்பம் நிலவியது.

சபையில் அமைதியை நிலைநாட்ட சபாநாயகர் எடுத்த முயற்சிகள் பலனளிக்காமற் போகவே, சபாநாயகர் சபையை புதன்கிழமை (இன்று) வரை ஒத்திவைத்தார்.

சபாநாயகரின் முடிவு குறித்து ஐ. தே. கவின் அதிருப்திக் குழு எம். பிக்களும் அதிருப்தியடைந்து காணப்பட்டனர். ஆனால் அவர்கள் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து கூச்சல் குழப்பத்தில் ஈடுபடவில்லை. (உ-எ)

## சபாநாயகரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] கருக்கும், பிரதி சபாநாயகருக்கும் குழுக்களின் பிரதித் தலைவருக்கும் தமது ஆதரவை வழங்குவார்கள் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டிடத்தில் தாம் உரையாற்றியபோது, எதிர்க்கட்சியினர் தம்மை ஆத்திர மூட்டிய போது அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களும், சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டதற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். [இ-த]

## எதிர்க்கட்சி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] வரை—

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபைக்கு கொண்டுவர அனுமதிக்காத வகையில் எதிர்க்கட்சிகள் நடந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அனேகமாக சபாநாயகருக்கு எதிரான பிரேரணையும் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால் இழந்தார்

மண்டைதீவுப் பகுதியில் நேற்று மாலை கடற்றொழிலுக்குச் சென்ற ஒருவர் கடற்படையினரின் மிதிவெடியில் சிக்கி தனது வலது காலை இழந்தார்.

நாவாந்துறையைச் சேர்ந்த பி. சைமன் [வயது 52] என்பவரே தனது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தவராவார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [உ-15]

## கொள்ளையிடப்பட்ட நகைகள் நாளை கோண்டாவிலில் கையளிப்பு

யாழ்ப்பாணம், அக். 9

சுழிபுரம் கன்னைக் கொள்ளைக் கோஷ்டியால் கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் நகைகள் நாளை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் பெயரைக் கூறி மேற்படி கோஷ்டியினர் ஆயுத முனையில் சாவகச்சேரி, சங்கானை, சுழிபுரம், அராலி, அளவெட்டி, கல்வியங்காடு போன்ற பகுதிகளில் கொள்ளை நடத்தி வந்தனர் என்றும் —

அந்தக் கோஷ்டியினரை விடுதலைப் புலிகள் கைது செய்து, விசாரணை நடத்தியதை அடுத்து பொதுமக்களின் நகைகள் பல கைப்பற்றப்பட்டன என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். [ஒ-8]

## மாலைதீவிலிருந்து விடுதலையானவரும் - சூட்டுக்குப் பலி!

கொழும்பு, அக். 9

தொச்சிமோட்டை, கொக்குவெளிப் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று புளொட் உறுப்பினர்களில் ஒருவர், மாலைதீவுப் புரட்சியில் கைதாகி, அண்மையில் விடுதலை செய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கனி என அழைக்கப்படும் செபமாலை இராயப்பு [24 வயது] என்ற இவர், மன்னார் குஞ்சுக்குளத்தைச் சேர்ந்தவர் ஆவார். [ஒ-8]

## ஒலி ராஜினாமா

கொழும்பு, அக். 9

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளரும், மேற்கு மாகாண மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஒஸி அபேகுணசேகரா கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் ஐ. சே. மு. வின் வெற்றிடம் ஒன்றுக்கு முதலில் ஒஸியின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்தது என்றும், பின்னர் அவரின் பெயர் நீக்கப்பட்டு ஸ்ரீ. ல. ம. க. செயலாளர் லை. பீ. டீ. சில்வாவின் பெயர் கொடுக்கப்பட்டது என்றும், ஒஸியின் இராஜினாமாவுக்கு இதுவே காரணம் என்றும் கூறப்படுகிறது. (இ-10)

## பயிற்சி ஆசிரியருக்கு குறுகிய நேர லீவு

கொழும்பு, அக். 9

பயிற்சி ஆசிரியர்களின் நன்மை கருதி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குறுகிய விடுமுறை வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்துள்ளார்.

வார இறுதி பயிற்சி நெறிகளைப் பின்பற்றும் பயிற்சி ஆசிரியர்களுக்கு வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் இந்த விடுமுறை வழங்கப்படும். (த)

---

## அறிவித்தல்

15 ஆம் திகதிக்கு முன்னர் 93 A/L மாணவர்களை அழைக்கக் கூடாது என்பதும், பாடசாலை நாட்களில் 4-00 மணிக்கு முன்னர் மாணவர்களை அழைக்கக் கூடாது என்பதும் எமது அறிவித்தலின் பொருளாக அமைந்தது. இதற்கு முரணாக விளம்பரம் செய்த சாவகச்சேரி சிவாஜி கல்வி நிலையத்திடமும், கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையத்திடமும் விவரம் கேட்கப்பட்டுள்ளது.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[18114]

---

## வட இலங்கை மருத்துவர் சங்கம்

(Incorp. No. 45 of 1988)

### கலந்துரையாடல்

பொருள்: மருந்துகள் கொள்வனவும், விநியோகமும்.

இடம்: வண்ணார்பண்ணை, வண். மேற்கு வைத்தியசாலை.

காலம்: திங்கட்கிழமை (14 - 10 - 1991)

பி. ப. 2-30 மணிக்கு —
தனியார் மருத்துவமனை வைத்தியர்களும், தனியார் வைத்தியர்களும்.

பி. ப. 3-30 மணிக்கு —
சிகிச்சையில் ஈடுபட்டுள்ள பதிவு பெற்ற வைத்தியர்கள் (R.M.P.P.)

அன்புடன் அழைக்கின்றோம்.

(4334) - செயலாளர்.

---

யாழ் / கோண்டாவில் கிழக்கு

அருள்மிகு

## ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்

ஆலய வருடாந்த மஹோற்சவம் செவ்வாய்க் கிழமை [08 - 10 - 1991] கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது.

| | | |
|---|---|---|
| தேர்த்திருவிழா | — | 16 - 10 - 1991 காலை 9 மணி |
| தீர்த்தோற்சவம் | — | 17 - 10 - 1991 காலை 10 மணி |
| பூங்காவனம் | — | 18 - 10 - 1991 |

தேவஸ்தான பரிபாலன சபையும்,
உபயகாரரும்.

[சி-0640]

---

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)
யாழ்ப்பாணம்.

**A/L - 93** (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்)

**O/L - 90, 91,** G. A. Q.

Spoken English
Short-Hand Typing இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவுகள்
12 - 10 - 1991 ஆரம்பமாகின்றன.

[18358]

---

## Pure-App.

திரு. குணசிங்கம்
B. Sc. (Cey.)

**92 A/L**

PURE:-
வரிசை மாற்றமும் சேர்மானமும்

APP:-
நிலையியல்

ஆரம்பம்:
12-10-1991
10 a.m.

**93 A/L**

ஆரம்பம்:
16-10-1991

விவரங்களுக்கு:
Personal
NEW SCIENCE CENTRE
Eliakam Front Lane,
JAFFNA.

[சி-0625]

---

## தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்

### முக்கிய அறிவித்தல்

சகலதர ஊழியர்களினதும் கவனத்திற்கு.

1-3-81 — 31-12-90 வரையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் [E. T. F.] வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகை மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்குத் தேவையான படிவங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்காக கீழ்க்காணும் இட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1. 10-10-91 [காலை 8-30 — பி. ப. 4-30]
முரசுமோட்டை திரு. ஆனந்தம் அவர்களின் வீடு, நகஜீவனம் அருகாமை.

2. 12-10-91 [காலை 8-30 — பி. ப. 4-30]
பளை மகா வித்தியாலயம்.

3. 13-10-91 [காலை 8-30 — பி. ப. 4-30]
கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.

தற்போதைய தங்குமிட வசதிக்கேற்ப மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு மையத்தில் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளித்து தங்கள் படிவங்களைப் பூர்த்தி செய்யவும். இப்படிவங்களைப் பூர்த்தி செய்யத் தவறினால் அவரவருக்குரிய கொடுப்பனவை இழக்க நேரிடும். எனவே சகல ஊழியர்களும் [நிரந்தர, அமைய பருவகால ஆண் / பெண்] தவறாமல் சமுகம் தந்து விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கு. வேலாயுதபிள்ளை
பிராந்திய முகாமையாளர் [வ. பி.]

[சி/0708]

---

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை செல்லத்துரை

[வவுனியா, பிரபல வர்த்தகர்]

மதவாச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது வவுனியாவில் பிரபல வர்த்தகருமான மதவாச்சி செல்லத்துரை என அழைக்கப்படும் காசிப்பிள்ளை செல்லத்துரை காலமானார். இவர் செல்வநாச்சியாரின் அன்புக் கணவரும், நடராசாவின் அன்புத் தம்பியாரும், மகேஸ்வரன் [மகிமா ரேடர்ஸ், வவுனியா], சிவனேஸ்வரன், லோகேஸ்வரன், ராஜேஸ்வரன் [கனடா], மகேஸ்வரன் [சுவிஸ்], மகேஸ்வரி, யோகேஸ்வரி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராமநாதன் (டாக்டர், மதவாச்சி), ராஜேஸ்வரி, லீலாவதி, சிவரூபராணி, கிருஷ்ணலீலா ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜா, தர்மஜா, மணிமாறன், சிவாஜினி, ஸ்ரீகரன், சிவதர்ஷினி, சிவரோகினி, விஜிதரன், ரஜனி, அனுஷா, சிந்துஜா, சங்கீதா, ரூவரன், ரமேஷ், நிஷாந்தன், துஷாந்தனா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [9-10-91] புதன்கிழமை இன்று பகல்-12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வவுனியா இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செ. மகேஸ்வரன் [மகன்]
(மகிமா ரேடர்ஸ், வவுனியா)

(18112)

## கனகரத்தினம் சண்முகம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த கனகரத்தினம் சண்முகம் (ஓய்வு பெற்ற அதிபர்) கொழும்பில் 3-10-1991 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வி. கனகரத்தினம், தையல்நாயகி அம்மா அவர்களின் புத்திரரும், காலஞ்சென்ற அழகம்மாவின் [ஆசிரியை] அன்புக் கணவரும், Dr. சொர்ணராணி, Dr. பத்மதேவி, பத்மசோதி (ஆசிரியை), Dr. பத்மரஜினி, Dr. லோகேஸ்வரி, கணேஷ் ஆகியோரின் தந்தையாரும், தேவராஜ (Eng.), Dr. புவனேஸ்வரன், மகேந்திரநாதன் (Mech. Eng.), Dr. செல்வராசா, சிவகுமாரன் (Accountant) ஆகியோரின் மாமனாரும், இறாணி, ஜராணி, பிரசாந்தி, பாமினி, ஐங்கரன், சர்மிளா, பிரித்தா, குமார ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-10-1991 இல் கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தம்பாபிள்ளை.
(சகோதரர்)

கல்வளை,
சண்டிலிப்பாய்.

(4335)

## திருமதி சோமசுந்தரம் மகேஸ்வரி

நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சோமசுந்தரம் மகேஸ்வரி காலமானார். இவர் காலஞ்சென்ற மட்டுவில் தம்பு சோமசுந்தரத்தின் மனைவியும், கதிர்காமநாதன் [வெலிசர கொழும்பு], சரவணபவநாதன் [கனடா], காலஞ்சென்ற பத்மநாதன், கௌரி [கண்டி], சண்முகநாதன் [வைத்திய கலாநிதி கனடா] ஆகியோரின் தாயாரும், கலாநிதி வாமதேவன் [விரிவுரையாளர் பேராதெனிய], வைத்திய கலாநிதி விமலானந்த, புவனேஸ்வரி [ஆசிரியை, மகளிர் கல்லூரி மானிப்பாய்], ராசமணி [கனடா], நிர்மலாதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சோ. சண்முகநாதன் [இந்திரன்]
[மகன்]

மட்டுவில் தெற்கு

[18113]

## திருமதி வேலுப்பிள்ளை சின்னத்தங்கம்

வேலணை மேற்கைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நா. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற க. கனகசபாபதிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சொக்கலிங்கம் கௌசல்யா, திருமதி சற்குருநாதன் சிவபாக்கியம் [ஆசிரியை, வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை], தவனேசன் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும் —

சி. சொக்கலிங்கம் [கனடா], சித்திரகலா, திருமதி தேவி ஆனந்தராசா, சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி பூரணம் கனகசபாபதிப்பிள்ளையின் மைத்துனியும், சுந்தரலிங்கம், தமிழ்ச்செல்வி, ரஞ்சித், கிருஷ்ணலிங்கம், சுகுணா, சுபாஷினி, தவரஞ்சன், தவரூபன், தவபாலன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [9-10-91] பிற்பகல் 3 மணியளவில் இல. 84, பிறவுண் வீதி, நீராவியடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: வா. தவச்செல்வம், J. P.

இல. 84, பிறவுண் வீதி,
நீராவியடி.

[18118]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் … அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org